2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2019–2020, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, எங்களை காவல் தெய்வமாக இருந்து காத்து வருகிற அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019–2020 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை

@ 490 முதல் 494 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.

இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 6,580.15 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 3,952.48 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 2,627.67 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2019 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20 ஆம் நாளன்று, 2019–2020 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், "புதுப் பணிகள்" மற்றும் "புது துணைப் பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

3. 2020 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்புகளுடன் 1,000 ரூபாய் ரொக்கத் தொகையும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2,363.13 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–45

4. சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்தின்கீழ் இரண்டு மின் தொடரமைப்புத் திட்டங்களை நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 4,332.57 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்தொகை, ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) கடனுதவித் தொகை மற்றும் தமிழ்நாடு அரசின் பங்கு மூலதன உதவியான 1,000 கோடி ரூபாயையும் உள்ளடக்கியது. நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்கென துணை மதிப்பீடுகளில் மொத்தமாக 108 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. திண்டுக்கல், இராமநாதபுரம், நீலகிரி, திருப்பூர், விருதுநகர், நாமக்கல், திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்காக மாண்புமிகு அம்மா

அவர்களுடைய அரசு 3,266.47 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக துணை மதிப்பீடுகளில் 90 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துடன் இணைந்து, கிராமப்புறங்களில் உள்ள சிறிய நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகளைப் புதுப்பிக்கும் பணிகளுக்காக 2019–2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 500 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் 346.04 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

7. கரும்புக்கான நியாயமான மற்றும் ஆதாய விலை (FRP) நிலுவைத் தொகையை வழங்கிட 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 143.73 கோடி ரூபாயை வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. மேலும், நேஷனல், அமராவதி மற்றும் என்.பி.கே. ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தங்கள் பணியாளர்களுக்கு சட்டப்படியான நிலுவைத் தொகைகளை செலுத்துவதற்கு 28.74 கோடி ரூபாயை வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் மொத்தமாக 175.02 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாட்டில், திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் வெள்ளத்தால் அதிக பாதிப்படையக்கூடிய கரையோரப் பகுதிகளில் நீண்ட கால வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 290.78 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு’ என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

9.2019-2020 ஆம் ஆண்டில் 2,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவியாக 450 கோடி ரூபாயையும், தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகத்திற்கு பங்கு மூலதன உதவியாக 150 கோடி ரூபாயையும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இதுபோக, நிலுவை ஊக்க ஊதியம் மற்றும் கருணைத் தொகைகளைச் செலுத்துவதற்காக, மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 206.53 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகைகள் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. கோயம்புத்தூர் விமான நிலைய ஓடுதளத்தை விரிவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நில எடுப்பிற்கான இழப்பீட்டுத்தொகையை நில உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 189.30 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019-2020 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	90,44	—	—
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	—	—
3	நீதி நிருவாகம்	5,59,20	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	32	7	—
5	வேளாண்மைத் துறை	192,87,10	7,24,37	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*157,37,23*	*15,00,01*	—
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*21,67,43*	*16,98,01*	—
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*57,10*	—	—
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	*2,07,49*	*3*	—
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	*11,66,61*	—	—
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	*19,94,72*	—	—
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	*2,00,08*	*1*	*37,50*
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	*2,363,76,65*	*2,50,00*	—
14	எரிசக்தித் துறை	*2,48,86*	*45,00,00*	*63,00,00*
16	நிதித் துறை	*9,11*	—	—
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	*1,02,14*	*1,20,00*	*45,00*

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	11,51,70	—	—
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	89,14,93	93,33,01	—
20	உயர் கல்வித் துறை	49,77,69	4	—
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	2,19,27	41,78,01	—
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	8,18,33	2	—
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	93,98	1	—
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7	1	—
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	85,35	—	—
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	47,09,21	—	—
27	தொழில் துறை	5,96,62	73,78,00	264,34,74
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	13,41,84	—	—
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	10,28,14	5,00,70	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	2	—	—
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	15,90,87	—	—
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	24,84,56	17,66,08	—
33	சட்டத் துறை	4	—	—
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	58,83,13	5,00,01	—
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	12	2	—
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	6	—	—
38	பொதுத் துறை	50,55,64	—	—
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	72,63	89,70,37	—
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	24,99	24,86,92	—
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	5,94,88	10,02	—
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	359,87,61	468,64,60	—
43	பள்ளிக் கல்வித் துறை	73,97,19	—	—
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	4,07,30	—	—
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	4,41,98	4	—
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	85,30	—	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	27,22	—	—
48	போக்குவரத்துத் துறை	49,76	694,38,85	206,52,48
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	2,60,18	—	—
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1	—	—
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	220,08,51	—	—
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	7	1	—
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	42,62,63	39,98,39	16,72,00
பெருமொத்தம்		3,887,76,32	1,642,17,61	551,41,72

முற்பகல் 11–50

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)–ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவை விதி 13, உட்பிரிவு (2)–ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத்